

வரும் 2047க்குள்

வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க முதலீடு செய்யுங்கள்

தொழில் நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

புதுடெல்லி, பிப்.28: ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவது குறித்து, பட்ஜெட்டுக்குப் பிந்தைய பல இணையவழி கருத்தரங்கில் காணொலி மூலம் பிரதமர் மோடி நேற்று உரையாற்றினார். அவர் பேசியதாவது:வரும் 2047ம் ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குதல் என்ற பெரிய இலக்கை நோக்கிய ஒரு படியாக ஒவ்வொரு பட்ஜெட்டும் செயல்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட நம்பிக்கை சார்ந்த சீர்திருத்தங்கள் காரணமாக நாடு தற்போது சீர்திருத்த எக்ஸ்பிரஸில் சவாரி செய்து வருகிறது. 11 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.2 லட்சம் கோடியாக இருந்த பொது மூலதனத்தை 2026-27 பட்ஜெட்டில் ஒன்றிய அரசாங்கம் ரூ.12 லட்சம் கோடிக்கு மேல் உயர்த்தியுள்ளது.

இந்த அதிக மூலதன ஒதுக்கீடு தனியார் துறை புதிய வீரியத்துடன் முன்வருவதற்கான ஒரு சமிக்ஞையாகும். 2026-27 பட்ஜெட் அறிவிப்புகள் அனைத்தையும் தொழில்துறை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியா நிறுவனங்கள் புதிய முதலீடு, புதுமைகளுடன் முன்வர வேண்டும்; நிதி நிறுவனங்கள் நடைமுறை தீர்வுகளை வடிவமைக்கவும் சந்தை நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவ வேண்டும்.

அரசாங்கம், தொழில்துறை மற்றும் அறிவுசார் கூட்டாளிகள் ஒன்றிணையும்போது, சீர்திருத்தங்கள் முடிவுகளாக மாறும். காகிதத்தில் வரும் அறிவிப்புகள் களத்தில் சாதனைகளாக மாறும். உள்கட்டமைப்பு விரிவாக்கம், வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை தொடர்பான பட்ஜெட் முடிவுகள் தேசிய பொருளாதாரத்திற்கு நிரந்தர பலத்தை அளிக்கின்றன. இவ்வாறு பிரதமர் பேசினார்.

காங்கிரசாரால் தாக்கப்பட்டதாக கூறி சிகிச்சை

கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் டிஸ்சார்ஜ்

காங்கிரஸ் மாணவர் அமைப்பினர் தாக்கியதாக கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கேரள சுகாதார அமைச்சர் வீணா ஜார்ஜ் உடன் செல்பி எடுத்து மகிழும் நர்ஸ்கள்.

திருவனந்தபுரம், பிப்.28: கண்ணூர் ரயில் நிலையத்தில் வைத்து காங்கிரஸ் மாணவர் அமைப்பினரால் தாக்கப்பட்டதாக கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜுடன் நர்சுகள் எடுத்த செல்பியால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

கேரளாவில் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை கிடைப்பதில்லை என்று கூறி காங்கிரஸ் கட்சியினர் சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜை கண்டித்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் கண்ணூர் ரயில்நிலையத்தில் வைத்து காங்கிரஸ் மாணவர் அமைப்பினர் நடத்திய போராட்டத்தின்போது வீணா ஜார்ஜ் தாக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர் கண்ணூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சைக்குப் பின் நேற்று அதிகாலை அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

நர்சுகளுடன் எடுத்த செல்பியால் சர்ச்சை

திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கண்ணூர் அரசு மருத்துவமனையில் அமைச்சர் வீணா ஜார்ஜுடன் 3 நர்சுகள் செல்பி எடுத்து சமூக வலைதளங்களில் பகிர்ந்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து கண்ணூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளரிடம் அமைச்சர் வீணா ஜார்ஜின் அலுவலகம் விளக்கம் கேட்டுள்ளது.

இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக கண்ணூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் விசாரணை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே சமூக வலைதளங்களில் அமைச்சருடன் எடுத்த செல்பியை வெளியிட்ட நர்ஸ் ஸ்மிதா கூறியது: அமைச்சர் வீணா ஜார்ஜுக்கு காயம் ஏற்படவில்லை என்றும், அவர் நாடகமாடுகிறார் என்று கூறுவதிலும் எந்த உண்மையையும் கிடையாது. ஒரு சில மணிநேரத்திலேயே நாங்கள் மிகவும் நெருக்கமாகிவிட்டோம். அதனால் தான் தைரியமாக செல்பி எடுத்தோம் என்றார்.

அரசியலமைப்பு சட்டத்தின் 21வது பிரிவின்கீழ்

பாஸ்போர்ட் வைத்திருப்பது, வெளிநாடு செல்வது தனிப்பட்ட சுதந்திரம்

டெல்லி உயர் நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி, பிப்.28: பாஸ்போர்ட் வைத்திருப்பது, வெளிநாடு செல்வது ஆகியவை தனிப்பட்ட சுதந்திரத்தின் ஒருங்கிணைந்த அம்சம் என டெல்லி உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ரஹேஜா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் யோகேஷ் ரஹேஜா கடந்த 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் பாஸ்போர்ட் புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்திருந்தார். அப்போது, அவருக்கு எதிரான எஃப்ஐஆர் ஒன்று நிலுவையில் இருப்பது குறித்த தகவலை பாஸ்போர்ட் புதுப்பித்தல் விண்ணப்பத்தில் குறிப்பிட தவறியதற்காக யோகேஷ் ரஹேஜாவின் பாஸ்போர்ட் கடந்த ஆண்டு ஜனவரி 17ம் தேதி முடக்கப்பட்டது. இதை எதிர்த்து யோகேஷ் ரஹேஜா தாக்கல் செய்த மேல்முறையீடும் கடந்த ஆண்டு மார்ச் 25ம் தேதி நிராகரிக்கப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு டெல்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, "ஒருவர் பாஸ்போர்ட் வைத்திருப்பதற்கும், வெளிநாடு செல்வதற்கும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 21வது பிரிவின்கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமையின் ஒருங்கிணைந்த அம்சம்.

பாஸ்போர்ட் வைத்திருக்கும் உரிமை மீதான அரசின் நடவடிக்கைகள் அதற்கான சோதனைகளை திருப்திப்படுத்த வேண்டும் மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளுக்கு இணங்க வேண்டும். எனவே, யோகேஷ் ரஹேஜாவுக்கு எதிராக கடந்த 17.01.2025 மற்றும் 25.03.2025 ஆகிய தேதிகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ரத்து செய்யப்படுகின்றன" என நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

மலையாள நடிகை பலாத்கார வழக்கில்

நடிகர் திலீப் விடுதலையை எதிர்த்து கேரள அரசு அப்பீல்

திருவனந்தபுரம், பிப். 28: மலையாள நடிகை பலாத்கார வழக்கில் நடிகர் திலீப் உள்பட 4 பேர் விடுவிக்கப்பட்டது மற்றும் 6 பேருக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கப்பட்டதை எதிர்த்து கேரள அரசு சார்பில் அம்மாநில உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு பிரபல மலையாள நடிகை ஒருவர் காரில் திருச்சூரிலிருந்து எர்ணாகுளம் செல்லும் வழியில் ஒரு கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த போலீசார், நடிகையின் காரை ஓட்டிய மார்ட்டின், முன்னாள் டிரைவர் பல்சர் சுனில்குமார் என்பவர் உள்பட 6 பேரை கைது செய்தனர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையில் பலாத்காரத்திற்கு சதித்திட்டம் தீட்டியதாக பிரபல நடிகர் திலீப் திலீப் அவரது நண்பர்கள் 3 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக எர்ணாகுளம் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் கடந்த வருடம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் பல்சர் சுனில்குமார், மார்ட்டின் உள்பட 6 பேருக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சதித்திட்டம் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி நடிகர் திலீப் உள்பட 4 பேர் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்நிலையில் இந்த தீர்ப்பை எதிர்த்து கேரள அரசு சார்பில் அம்மாநில உயர் நீதிமன்றத்தில் நேற்று அப்பீல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பது: சதித்திட்டம் தீட்டியதற்கு நடிகர் திலீப்புக்கு எதிராக முக்கியமான ஆவணங்கள் உள்ளன. இது தொடர்பான சாட்சியங்களை நீதிமன்றம் கண்டுகொள்ளவில்லை. விசாரணை நீதிமன்ற நீதிபதி ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டுள்ளார். குற்றவாளிகள் 6 பேருக்கும் மிகவும் குறைந்த தண்டனையே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அப்பீல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போக்சோ வழக்கில்

உண்மை கண்டறியும் சோதனைக்கு தயார்

சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்த் அறிவிப்பு

வாரணாசி, பிப்.28: உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் ஜனவரி 18ம் தேதி நடந்த மவுனி அமாவாசை மகா மேளாவின்போது புனித நீராடவிடாமல் தன்னை தடுத்ததாக உத்தரகாண்டில் உள்ள ஜோதிர்மடத்தை சேர்ந்த சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்த் சரஸ்வதி சர்ச்சையை எழுப்பினார். இந்நிலையில் கடந்த ஒரு ஆண்டாக மைனர் உட்பட இரண்டு பேரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக அவிமுக்தேஷ்வரானந்த் சரஸ்வதி மற்றும் அவரது சீடர் முகுந்தானந்த் ஆகியோர் மீது பிரயாக்ராஜில் உள்ள ஜூன்சி காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கோரி சங்கராச்சாரியார் கடந்த வாரம் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு வர இருந்தது. இது தொடர்பாக வாரணாசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவிமுக்தேஷ்வரானந்த்,போக்சோ சட்டத்தின் கீழ் எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கில் உண்மை கண்டறிய முடியும் என்றால் அது கண்டிப்பாக செய்யப்பட வேண்டும். உண்மையை வெளிக்கொணருவதற்கு கிடைக்கக்கூடிய எந்த முறைகளையும் பின்பற்ற வேண்டும். பொய் நீண்ட காலம் நீடிக்காது. பொய்யான கதையை உருவாக்கியவர்கள் அம்பலப்படுத்தப்படுவார்கள். இந்த புனையப்பட்ட வழக்கு குறித்து மக்கள் அறிந்து கொள்ளும்போது உண்மை தெளிவாகிவிடும்" என்றார்.

சென்னை உயர் நீதிமன்ற

தலைமை நீதிபதியாக எஸ்.ஏ.தர்மாதிகாரி நியமனம்

உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை

புதுடெல்லி, பிப்.28: சென்னை உயர் நீதிமன்றத்திற்கு புதிய தலைமை நீதிபதியாக எஸ்.ஏ.தர்மாதிகாரியை நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் ஒன்றிய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யாகாந்த் தலைமையிலான கொலீஜியம் குழு கடந்த இரு தினங்களுக்கு முன்னதாக கூடியிருந்த நிலையில், அதில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, கேரளா உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரியை சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த நடவடிக்கைக்கு ஒன்றிய சட்டத்துறை மற்றும் குடியசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார் என்று தெரியவருகிறது. இதில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதியாக இருக்கும் மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா வரும் மார்ச் 5ம் தேதியுடன் ஓய்வு பெறவுள்ளார். எனவே மார்ச் 6ம் தேதி முதல் தர்மாதிகாரி பொறுப்பேற்பார் என்று தெரியவருகிறது. இதேப்போன்று அரியானா உயர்நீதிமன்ற நீதிபதி லிசா கில், ஆந்திரா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். பாட்னா உயர்நீதிமன்ற நீதிபதிகளாக முகமது நதீம் செராஜ் உட்பட ஒன்பது வழக்கறிஞர்களை நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

யார் இந்த எஸ்.ஏ.தர்மாதிகாரி?

சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி 1966ம் ஆண்டு ராய்பூரில் பிறந்தவர். சிவில், கிரிமினல் மற்றும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர். 1992ம் ஆண்டு ஜபல்பூரில் உள்ள மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் ஒய்.எஸ். தர்மாதிகாரிக்கு ஜூனியராக பணியாற்றினார். மேலும் 2000 முதல் 2015 வரை அரசின் நிலை ஆலோசகராக, வருமான வரித்துறை, இந்திய ரிசர்வ் வங்கி, ஒன்றிய கலால் வரி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், பிஎஸ்என்எல், போபால் எரிவாயு உள்ளிட்ட வழக்குகளில் பணியாற்றினார்.

மேலும் ஜபல்பூரில் உள்ள மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தில் தர்மாதிகாரி 24 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். 2016ல் மத்தியப்பிரதேச உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், மார்ச் 17, 2018 அன்று நிரந்தர நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். கடந்த 2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், அவரை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்துள்ளது. இதில் கேரளா ஸ்டோரி 2 படம் குறித்த வழக்கை கடந்த சில தினங்களுக்கு முன்னதாக விசாரித்து இவர் உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கேரளா ஸ்டோரி 2 படத்தை வெளியிட கேரள உயர்நீதிமன்றம் அனுமதி

திருவனந்தபுரம், பிப்.28: கேரளா ஸ்டோரி 2 படத்திற்கு கேரள உயர்நீதிமன்ற தனி நீதிபதி விதித்திருந்த தடையை நேற்று டிவிஷன் பெஞ்ச் நீக்கி உத்தரவிட்டுள்ளது.

காமாக்யா நாராயண் சிங் என்பவர் இயக்கிய கேரளா ஸ்டோரி 2 என்ற படம் நேற்று இந்தியா முழுவதும் வெளியாக இருந்தது. இந்நிலையில் கேரளாவுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் காட்சிகள் இருப்பதால் இந்தப் படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று கூறி கேரள உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி பெச்சு குரியன், கேரளா ஸ்டோரி 2 படத்தை வெளியிட 15 நாள் தடை விதித்து உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து தயாரிப்பு நிறுவனம் சார்பில் கேரள உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சில் அப்பீல் செய்யப்பட்டது. அந்த மனுவில் எந்த மதத்தையோ, மாநிலத்தையோ அவமதிக்கும் வகையில் படத்தில் காட்சிகள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மனுவை நேற்று விசாரித்த நீதிபதிகள் சுஷ்ருத் ஏ.தர்மதிகாரி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் கேரளா ஸ்டோரி 2 படத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உத்தரவிட்டனர்.

தெற்கு இரயில்வே

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். SGW-S-203-HDG-599956-25/1 தேதி: 03.02.2026 திருத்தம் எண்-1

திருத்த அறிவிப்பு - 1 தேதி 25.02.2026 பணி பற்றிய விவரம்: போத்தனூர் சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடத்திற்காக, ஸ்லீப்பர்களுக்காக, ஸ்லீப்பர்கள் மற்றும் பிரிட்ஜ் கிளாம்ப் அசெம்ப்ளிக்காக, IRS பாயிண்ட் மெஷின் - 143 mm ஸ்ட்ரோக், 220 mm ஸ்ட்ரோக், கேபிள் கிளாம்ப் அசெம்ப்ளி–ன் கிரவுண்ட் கனக்சன்ஸ் க்காக ஹாட் டிப் கல்வனைசிங் – ஷாட் /சாண்ட் பிளாஸ்டிங் உடன் ஓர் ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ளுதல்

விடயத்தின் பெயர்	ஏற்கனவே உள்ளது	மாற்றப்பட்டது
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	26.02.2026 15:00	02.03.2026 15:00

டெண்டர் தொடர்பான விவரங்கள் அதிகாரப்பூர்வ Tender Portal ஆன http://www.ireps.gov.in இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

துணை தலைமை சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு பொறியாளர் / சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு / போத்தனூர்
தலைமை தொழிற்கூட மேலாளர், சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடம், போத்தனூர் அவர்களுக்காக

தெற்கு இரயில்வே

சென்னை கோட்டம், முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம், எலக்ட்ரிக் லோகோ ஷெட், அரக்கோணம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியானவர், இரயில்வேயின் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் https://gem.gov.in/ மூலமாக பின்வரும் பணிக்காக விருப்பம் உள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

ஜெம் ஒப்பப்புள்ளி எண்	GEM/2026/B/7243905, தேதி: 23.02.2026.
பணி பற்றிய விவரம்	அரக்கோணம் எலக்ட்ரிக் லோகோ ஷெட்டில் தூய்மையாக்கல், சுகாதார பாதுகாப்பு செய்தல் மற்றும் தொற்று நீக்கம் செய்தல் ஆகிய சேவை – வெளிப்பாடு என்னும் அவுட்கம் அடிப்படையில் (அதாவது பெருக்குதல், மாப் போட்டு துடைத்தல் மற்றும் தூசிகளைப் போக்குதல்) துப்புரவு காத்தல் பணிகளை இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மேற்கொள்ளுதல்
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	10-03-2026 அன்று 17. 00 மணி

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம்: https://gem.gov.in/
முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர்(ரோலிங் ஸ்டாக்), தெற்கு இரயில்வே, அரக்கோணம்-630001
மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும்

தெற்கு இரயில்வே

(கட்டுமான நிறுவனம்)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.CAO-CN-MS-PMS-02-2026

தேதி:24-02-2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் தலைமை பொறியாளர், கட்டுமானம், தெற்கு இரயில்வே, எழும்பூர், சென்னை 600 008 அவர்கள், எமது மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் www.ireps.gov.in ல் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் /ஒப்பந்தக்காரர்கள், www.ireps.gov.in ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும்.

பணி பற்றிய விவரம்

பின்வருவன இடையே புதிய இரயில்வே அகலப்பாதை தடம் கட்டுமானம் செய்ய செயல்திட்ட மேலாண்மை சேவைப் பணிகளை அளிப்பதற்காக அதிகாரப்பூர்வ பொறியாளர் (Authority Engineer) நியமனம் செய்வதற்காக உத்தேச வரைவு திட்டத்தை வரவேற்றல் (RFP) அதாவது – திண்டிவனம் – நகரி புதிய தடம் செயல்திட்டம் (1) செயினேஜ் 3.000 முதல் செயினேஜ் 54.500 வரை திண்டிவனம் மற்றும் செய்யார் இடையே (ரீச் I) (2) செயினேஜ் 54.500 முதல் செயினேஜ் 82.000 வரை செய்யார் மற்றும் ஆரணி இடையே (ரீச் II) (3)செயினேஜ் 82.000 கிமீ செயினேஜ் 114.600 கிமீ – ஆரணி (உட்பட) மற்றும் ராணிப்பேட்டை (உட்பட) நிலையங்கள் இடையே (ரீச் III) (4)செயினேஜ் 141.500 முதல் செயினேஜ் 170.000 வரை சோளிங்கர் டவுன் (தவிர) மற்றும் பொதட்டூர்பேட்டை (தவிர) இடையே(ரீச் V)

ரொக்க மதிப்பு ரூ (கோடியில்)	பிணை வைப்பு தொகை ரூ	பணியை முடிப்பதற்கான காலம் (மாதங்களில்)	15.30 மணியளவில் மூடப்படும் தேதி	11.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிக்கு முந்தைய ஆலோசனை கூட்டம் நடைபெறும் தேதி
35.13	1906600	30	24-03-2026	03-03-2026

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in அல்லது தலைமை நிர்வாக அதிகாரி, கட்டுமானம், தெற்கு இரயில்வே, ஈ.வே.ரா. நெடுஞ்சாலை, எழும்பூர், சென்னை 600 008 அவர்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தலைமை பொறியாளர் (கட்டுமானம்), எழும்பூர், சென்னை - 600008

(A Govt. of India Society)
Ministry of Micro, Small & Medium Enterprises
Organised by Ministry of MSME Govt of India
Government Certificate Professional Course on
Artificial Intelligence In Food Processing Industry
Course Time- 6.30 PM TO 9.30 PM | ஆன்லைன் ONLINE | Course Duration - 4 Days Course Date- 7, 8, 14, 15 MARCH 2026
email-info@citindia.org ,website-www.citd.in ph no -040-29561793
Address: MSME -DI Campus,65/1 ,GST Road,Guindy ,Chennai 600032
Landline No. 044-22500366
Contact:Production - types of food processing businesses in india, setting up a food processing unit, selection of processing and packing machines, daily production planning methods, raw material sourcing, production cost calculation, cold storage and warehousing options Quality control - raw material testing, food testing, batch coding and record maintenance Packaging - selection of packaging ideas and sustainable, labelling rules under food safety authority, packaging cost calculation, export packaging norms International standard certification - haccp, iso 22000, food safety audits and documentation, export certification Govt schemes and initiatives- food processing schemes, pmfme, nabard loan and subsidy support, msme udyam registration benefits, apeda, registration on government e-marketplace Legal and documentation- business registration, pollution control board approvals, factory license requirements, vendor and supply agreement drafting, consumer dispute handling, reply to show cause notices AI applications, production planning, demand forecasting, shelf life prediction, packaging material selection, compliance document drafting, cost comparison analysis, market research, DIGITAL MARKETING
for whom For - food processing entrepreneurs, regulatory and litigation lawyers, food technologists, supply chain managers, ai product managers and interested candidates
Course Fees - 3500 + 18% GST (Fees are not refundable)
हमें कॉल करें / Call us between 10 am to 6 pm
Contact:9403566219, 8007765693, 9699772711, 9791161148

இந்திய அரசு

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

(சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்)

செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு – சென்னை–1.
5வது CMRL தளம், வளாகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, கோயம்பேடு, சென்னை–600107
தொலைபேசி : 044-22251885 | மின்னஞ்சல் : chennai@nhai.org

பொது அறிவிப்பு

நல்லூர் சுங்கச்சாவடியில் 01.04.2026 தேதி முதல் பின்பற்றப்பட வேண்டிய மாற்றப்பட்ட (டோல்) கட்டணம் அட்டவணை

தமிழ்நாடு மாநிலம் நல்லூர் சுங்கச்சாவடியில் (பிளாசாவில்) கி.மீ. 21/625 நல்லூர் கிராமம் அருகே திருவள்ளூர் மாவட்டம் தே.நெ.5–ல் சென்னை தடா பிரிவில் கி.மீ. 11/000 முதல் கி.மீ. 54/400–ல் உள்ள சாலையைப் பயன்படுத்துபவர்களுக்கான சுங்கக் கட்டணம் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	வாகன வகை	வாகனம் ஒன்றுக்கு ஒரு வழிப் பயணத்திற்கு கட்டணம் (ரூபாய்)	வாகனம் அதே நாளில் திரும்ப பயணம் செய்ய கட்டணம் (ரூபாய்)	மாதாந்திர பாஸ் கட்டணம் ஒரு மாதத்தில் 50 ஒற்றை பயணம் செய்ய கட்டணம் (ரூபாய்)	பிளாசா அமைந்துள்ள மாவட்டத்திற்குள் பதிவு பெற்ற வர்த்தக வாகனங்களுக்கான கட்டணம் (ரூபாய்)
1	கார், ஜீப், வேன் அல்லது இலகுரக வாகனம்	80	120	2,715	40
2	இலகுரக வணிக வாகன வகை, இலகு பொருள் வாகனம் அல்லது மினி பஸ்	130	195	4,385	65
3	பஸ் அல்லது டிரக் (இரண்டு அச்சுகள்)	275	415	9,190	140
4	3 அச்சுகள் கொண்ட வணிக வாகனங்கள்	300	450	10,025	150
5	பல அச்சுகள் கொண்ட கட்டுமான இயந்திரங்கள் (HCM) அல்லது மண் ஏற்றி செல்லும் வாகனம் (EME) அல்லது பல அச்சுகள் கொண்ட வாகனம் (MAV) (4 முதல் 6 அச்சுகள்)	430	650	14,410	215
6	அதிக அளவு கொண்ட வாகனம் (7 அல்லது அதற்கு மேற்பட்ட அச்சுகள் கொண்டவை)	525	790	17,540	265

சங்கச் சாவடியிலிருந்து 20 கி.மீ. தூரத்திற்குள் குடியிருப்போருக்கு 2026–27ஆம் ஆண்டுக்கான வர்த்தகமல்லாத உள்ளூர் வாகனங்களுக்கு திருத்தப்பட்ட மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.350/–.

திட்ட இயக்குநர்
NHAI, PIU - சென்னை-1.

சாலைகள் மட்டுமல்ல, தேசத்தின் கட்டுமானம்

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து(கள்) மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
கிளை அலுவலகம்: 22/1E, 1வது தளம், ஜவஹர்லால் நேரு சாலை, திருவள்ளூர்-602001, கிளை அலுவலகம்: 3வது தளம், 104/1, முத்துலிங்க ரெட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை- 600045

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/RTRR/0923/1162951 பக்கியராஜ் E/ரேவதி B கி.அ.: ரோஷ்னி _ திருவள்ளூர்	Rs. 14,76,928.23 as on date 14-05-2025	அடையாளப் பூர்வ	மனை எண்.82, ஸ்ரீபெரும்புதூர் பி, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு – PIN – 602301, இந்தியா	Rs. 14,06,000	Rs. 1,40,600	30.03.2026	Rs. 10,000	06-03-2026 from 11:00 A.M. to 05:00 P.M.	31-03-2026, from 01:00 P.M. to 02:00 P.M.	*ஏதுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0424/1249208 கபிலன் சூரியகுமார்/இந்திரகுமாரி முகுந்தன் கி.அ.: ரோஷ்னி மேற்கு தாம்பரம்	Rs. 24,16,481.82 as on date 14-05-2025	கையக	ச.எண்.527/33, பழைய எண்.82, மனை எண்.40, புதிய எண்.24 சிவகாமி நகர், தாலுகா காஞ்சிபுரம், சென்னை – PIN – 600048, இந்தியா	Rs. 23,28,000	Rs. 2,32,800	30.03.2026	Rs. 10,000	06-03-2026 from 11:00 A.M. to 05:00 P.M.	31-03-2026, from 01:00 P.M. to 02:00 P.M.	*ஏதுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0524/1261219 வெங்கடேஷ் V/யோகேஷ்வரி ஜானகிராமன், கி.அ.: ரோஷ்னி மேற்கு தாம்பரம்	Rs. 25,50,153.60 as on date 14-05-2025	கையக	ச. எண் 527 2B, 33 பழைய பட்டா No14126, S.No.527 33B, நகர் பழைய எண்.82 புதிய எண்.34 வரதராஜபுரம் கிராமம் குன்றத்தூர் தாலுக்கா, காஞ்சிபுரம், PIN 600048, இந்தியா	Rs. 24,36,000	Rs. 2,43,600	30.03.2026	Rs. 10,000	06-03-2026 from 11:00 A.M. to 05:00 P.M.	31-03-2026, from 01:00 P.M. to 02:00 P.M.	*ஏதுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0224/1217792 விக்னேஷ் R/திலகவதி R கி.அ.: ரோஷ்னி மேற்கு தாம்பரம்	Rs. 32,45,946.62 as on date 14-05-2025	கையக	பிளாட் எண் F3, முதல் தளம், ராகவேந்திரா நகர் II, கூடுவாஞ்சேரி சார்பதிவு அலுவலகம் ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் – 603203, இந்தியா	Rs. 31,13,000	Rs. 3,11,300	30.03.2026	Rs. 10,000	06-03-2026 from 11:00 A.M. to 05:00 P.M.	31-03-2026, from 01:00 P.M. to 02:00 P.M.	*ஏதுமில்லை/ அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயலிபாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிமுறைகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். 4. M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்–ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்–500038, இணையதளம்: info@bankauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை ஏங்கெல்ஸ்/ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண் செல்பேசி: 9344007827/ 9840487424 / 9738931789, மின்னஞ்சல்: auction@pnbhousing.com. அல்லது இணையதளம்: www.pnbhousing.com. காணவும்.

இடம்: ரோஷ்னி_திருவள்ளூர், ரோஷ்னி_மேற்கு தாம்பரம் நாள்: 27-02-2026 ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்